**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 32 /2021 PW1**

13.08.2024 **வா.சா.1 திரு. உண்ணாமலை சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

என்னிடம் காட்டப்படும் வழக்குரை (ஓ,எஸ். 182/2013) நகல் போளூர் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்குரை பி.வா.சா.ஆ.1. மேற்படி வழக்கானது கலசப்பாக்கம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட ஓ.எஸ்.77/2019 என வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி ஓ.எஸ். 77/2019 வழக்கில் கண்டுள்ள இரண்டு சொத்துக்களில் முதல் அயிட்ட சொத்தை மட்டும் உரிமைகோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நிருபண வாக்குமூலம் ஓ.எஸ். 77/2019 வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த நிருபண வாக்குமூலம் பி.வா.சா.ஆ.2. மேற்படி நிருபண வாக்குமூலத்தில் 7ம் பத்தியில் தாவா 1வது அயிட்ட சொத்து 17 செண்ட் உள்ளதனை எனக்கு பஞ்சாயத்தில் ஒதுக்கினார்கள் என்றும், 2ம் பிரதிவாதியிடம் 2ம் அயிட்டத்தில் பல பேர் வீட்டு மனைகள் கிரையம் பெற்றவர்கள் பாதிக்கப்பட கூடாது என்பதாலும், தாவா 1ம் அயிட்ட சொத்தில் எவ்வித வில்லங்கமும் நடக்காததால் எனக்கு ஒதுக்கினார்கள். நானும், பஞ்சாயத்திற்கு கட்டுப்பட்டு பஞ்சாயத்து தீர்ப்பை ஏற்றுக் கொண்டேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது இந்த வழக்கில் 1, 2 அயிட்ட சொத்துக்களை பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி போளூரில் இருந்து கலசப்பாக்கம் மாறிய அசல் வழக்கு எண் 77/2019 எனக்கு எதிராக தள்ளுபடியானது என்றால் சரிதான். அந்த வழக்கிலும், இந்த வழக்கிலும் நான் முன்னுக்கு பின் முரனாக நிவாரணம் கோரியுள்ள காரணத்தால் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு 77/2019ல் நான் என்னுடைய முழு நிவாரணத்தையும் கோரியிருக்க வேண்டும் என்றும், அப்படி கோராமல் இந்த

வழக்கு கோரியிருப்பது செல்லத்தக்கது அல்ல என்றும், எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண் 77/2019ல் குறுக்கு விசாரணை சாட்சியும் என்னுடையது தான். அது பி.வா.சா.ஆ.3. மேற்படி குறுக்கு விசாரணை வாக்குமூலத்தில் (18.4.2018) அறிவிப்பை கொடுக்கும் போது என்னுடைய தாயார் என்னுடன் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். அறிவிப்பை என் தாயாருக்கும் கொடுத்தேன் என்றால் சரிதான். சண்முகத்திற்கு 2ம் பிரதிவாதி கொடுத்த கிரையப் பத்திரத்தில் எனது கணவர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்று மேற்படி குறுக்கு விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் தாயாரை அழைத்துச் சென்று தான செட்டில்மெண்டை ரத்து செய்துவிட்டோம் என்று எனது மேற்படி குறுக்கு விசாரணை வாக்குமூலத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்த பிறகு மனைப்பிரிவுகளில் உள்ள மனைகள் விற்பனை ஆகிவிட்டது என கண்டுள்ளது என்றால் சரியல்ல. (வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
**திருவண்ணாமலை.**